**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண்.200/2025

The Oaths Act 1969, Act No.44/1969 விதிமுறைகளின்படி 15.04.2026**ம்** நாளாகிய இன்று திருமதி.P.ஸ்ரீதேவி.,எல்.எல்.எம்., அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரஸ்வதி | தொழில் | : | |
| க/பெ.பெயர் | : | ஞானவேல் | கிராமம் | : | |
| வயது | : | 46 | மாவட்டம் | : | |

பி.வா.சா:1

முதல் விசாரணை:–

நான் இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி. 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் 1ம் சாட்சி. நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, எதிர் வழக்குரையில் கோரியுள்ளவாறு தாவாவை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்):–

இந்த வழக்கை தாக்கல்செய்துள்ள வாதி சோமசுந்தரம் என்பவர் எனது அப்பாவின் அண்ணன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ஈஸ்வரன் என்பவர் எனது பெரியப்பா என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சுகந்தி எனது தாயார். 3ம் பிரதிவாதி எனது மூத்த சகோதரி ஆவார். 5ம் பிரதிவாதி எனது இளைய சகோதரன் ஆவார். 6 மற்றும் 7 பிரதிவாதிகள் சண்முகசுந்தரம் மற்றும் சரவணகுமார் எனது சித்தப்பாக்கள் என்றால் சரிதான். 8 முதல் 10 பிரதிவாதிகள் எனது சித்தப்பா கணேசனின் வாரிசுகள் என்றால் சரிதான். 11 மற்றும் 12 பிரதிவாதிகள் தாவா சொத்து பாகம் பிரிந்த பாலசுப்ரமணியம் என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா பாதை மின்னப்பாளையம் –

## Copy of Deposition

எல்லப்பாளையம் தார் ரோட்டில் எரிகாட்டை ஒட்டி தெற்கு நோக்கி திரும்பி பின்னர் கிழக்கு நோக்கி திரும்பி மீண்டும் தெற்கு நோக்கி சென்று மேற்கில் இருந்து கிழக்காக செல்லும் தாவா சொத்தில் சேர்கிறது என்று சொன்னால் சரிதான். இந்த தாவா சொத்து 1972ல் குப்புசாமி முதலியார் மற்றும் பாலசுப்ரமணியம் மற்றும் இதர பங்காளிகளுக்கிடையே பாகம் செய்யப்பட்ட சொத்து என்றால் சரிதான். குப்புசாமி முதலியார் எனது தாத்தா என்றால் சரிதான். O.S.152/2024ல் இறுதி நிலை தீர்ப்பாணையின் படி எங்களில் வாதி மற்றும் 1 முதல் 10 பிரதிவாதிகளிடையே ஏற்கனவே பாகம் பிரிந்த சொத்திற்கு செல்ல இந்த தாவா வண்டிப்பாதைதான் ஒரே பாதை என்றால் சரிதான். 1972 பத்திரத்தில் தாவா வண்டிதடம் குறித்த அளவுகள் ஏதும் இல்லை. வண்டிப்பாதை பாத்திய உரிமை மட்டுமே உள்ளது என்றால் சரிதான். எனது பெரியப்பா சோமசுந்தரம் அவரது சொத்திற்கு சென்று விவசாயம் செய்யும்போது வண்டிபாதையை பயன்படுத்த நானும், பிரதிவாதிகளும் சேர்ந்துதான் இடையூறு செய்தோம் என்றால் சரியல்ல. விவசாயத் தேவைக்காக JCB மற்றும் புல்டோசர்கொண்டு வரும்போது நாங்கள் தடுத்தோம் என்றால் சரியல்ல. தாவா வண்டி பாதைக்கு அளவுகள் குறிப்பிடாததை சாதகமாக கொண்டு வாதி தாவா வண்டிப்பாதையை பயன்படுத்துவதை நாங்கள் இடையூறு செய்கிறோம் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் விவரித்தவாறு வண்டி பாதைகள் அளவுகள் குறிப்பிட்டு வாதிக்கு விளம்புகை பரிகாரம் கிடைப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை:– இல்லை

Taken down by me in Open Court read over to the witness and acknowledge by

Interpreted
Him / Her To Be Correct

P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2026.04.15 15:28:55 +0200

Subordinate Judge,
Kodumudi